[10th March 1966

திரு. வை. சங்கரன் : கல்லூரிகளில் ஹியுமானிடிஸ் Optional ஆக இருக்கிறது. ஆனால் அதற்கு மாணவர்கள் வருவதில்லை. இப்பொழுது 10-வது வகுப்பில் 'ஹ்யூமானிடீஸ்' 'எலக்டிவ்' சப்ஜெக்டாக வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தகுந்த அளவு மாணவர்கள் வருவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள சர்க்கார் உத்தேசித்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது சிலபஸ் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். சிலபஸ் நிர்ணயிக்கப்பட்ட பிறகு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ம. கமலநாதன் : சமூக பாடத்தை எடுத்துவிட்டு, முன்பு போல விஞ்ஞான பாடம் விருப்பப் பாடமாக கட்டாயமாக்கப்படும் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது சிலபஸ் திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலே பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்படும்.

திரு. செ. மாதவன் : இப்பொழுதுள்ள பாடத் திட்டம் தேர்வுக்கு என்று விஞ்ஞான பாடத்தைப் படிக்கக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சி மனப்பான்மை ஏற்படக்கூடிய அளவுக்கு இந்தப் பாடத் திட்டம் மாற்றி அமைக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தொடக்கத்திலே ஆராய்ச்சி செய்வது என்ற வகையிலே அல்ல. ஆனால், ஆராய்ச்சி மனப்பான்மை மாணவர்களுக்கு அந்தக் கட்டத்திலேயே வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். எலிமெண்டரி ஸ்டேஜில், அதாவது, முதலில் எவ்வளவு தூரம் மாணவர்களுக்கு விஞ்ஞானத்தில் ருசி ஏற்படுத்தி, அடிப்படையிலே அவர்கள் விஞ்ஞான அறிவு பெறச்செய்வது என்பதைப் பற்றித் தான் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

MR. SPEAKER : Now we will take up questions relating to the Hon. Minister for Public Health.

Orthopaedic Centres in the State

* 231 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is any proposal before the Government to open orthopaedic centres in the State for the treatment of patients having squint; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.